Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 203/2024 PW-5**

Name : பாண்டியராஜன்
Father / Husband name : தர்மபாலன்
Village : கீழ்மாவிலங்கை
Age : 35

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 11.03.2026

A1, A2 present. Both side counsel present.

**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவம் சம்மந்தமாக நான் தனியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றையதினம் இரவு போலிசார் சம்பவயிடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல, மறுநாள் காலை சுமார் 10.00 மணியளவில் வந்தார்கள். அவ்வாறு வந்தபோது போலிசார் அக்கம் பக்கம் இருந்தவர்களை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரித்து கையொப்பம் வாங்கினார்களா என்றால் விசாரித்தார்கள், கையொப்பம் வாங்கிவில்லை. 1வது எதிரியின் குடும்பத்தினர் திருவிழாவிற்கு பிரிவு பணம் கொடுப்பார்கள் என்றால் சரிதான். நாங்கள் கூட்டம்போட்டபோது சுமார் 100 நபர்கள் இருந்தார்களா என்றால் இருந்தார்கள். 1வது எதிரியின் குடும்பமும் பிரிவு பணம் கொடுத்ததால் பணத்தை வீண் செலவு செய்யாதீர்கள் என்று 1வது எதிரி சொன்னபோது நாங்கள் சண்டைபோட்டோம் என்றால் சரியல்ல, 1வது எதிரி தான் தகாத வார்த்தையால் பேசினார். 1வது எதிரி அவ்வாறு தகாத வார்த்தைகளால் பேசியதற்கு ஊர்க்காரர்கள் அடித்துவிட்டார்கள் என்றால் இல்லை, நாங்கள் சண்டையை மறித்து தான் விட்டோம்.

2. நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை தான் போலிசார்

விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்தபோது 1வது எதிரி லட்சுமணனின் வலது கை கட்டைவிரலை கடித்துவிட்டதாக சொன்னேனா என்றால் சொன்னேன். 1வது எதிரி கீழே கிடந்த செங்கல்லை எடுத்து நெற்றியில் அடித்துவிட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். அந்த செங்கல்லை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. லட்சுமணனுக்கு இரத்தக்காயம் ஏற்பட்டதை நான் பார்த்தேனா என்றால் நினைவில்லை, அவர் மருத்துவமனைக்கு சென்றார். அசா.1 மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் தெரியாது. புகார் கொடுக்க நாங்கள் ஊர்க்காரர்கள் சேர்ந்து சென்றோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் இரவு என்பதால் 1வது எதிரி எங்களிடம் கணக்குக்கேட்டபோது அவரை நாங்கள் அடித்துவிட்டோம், அப்போது வத்துமலையின் மீது ஊர்க்காரர்கள் விழுந்து காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. வத்துமலை, சங்கீதா ஆகியோர்களுக்கு ஏற்பட்டக்காயத்தை வைத்து எதிரிகள் மீது பொய்யான புகார் கொடுத்து பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. திருவிழா சம்மந்தமாக 1வது எதிரி கணக்கு கேட்டதால் அவரை அடித்துவிட்டு அவர் புகார் கொடுத்துவிடுவார் என்று பயந்து அ.சா.1 ஐ வைத்து பொய்யான புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. 2வது எதிரி சம்பவத்தின்போது ஊரில் இல்லை, 1வது எதிரியை அடித்ததை கேட்டதால் அவர் மீது பொய்யான புகார் கொடுத்தோம் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது வாக்குமூலத்தை கைப்பட எழுதினார்களா அல்லது தட்டச்சு செய்தார்களா என்றால் நினைவில்லை. சம்பவத்தின்போது நான் ஊரில் இல்லை, அதனால் நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் தான் வத்துமலையை மருத்துவமனைக்கு காரில் அழைத்துச்சென்றேன். நான் காரில் அழைத்து சென்றதை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். வத்துமலைக்கு

ஏற்பட்டக்காயத்தை பற்றி மருத்துவரிடம் நான் தான் சொன்னேனா என்றால் ஆமாம், நான் தான் சொன்னேன். அப்போது எனது பெயரை எழுதிக்கொண்டார்களா என்றால் நினைவில்லை. நான் வத்துமலையை மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவில்லை, வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால்
தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு
செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு
அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என்
முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.